احكام الاضحية والعقيقة

குர்பானியின் சட்டங்களும் அகீகாவின் முறைகளும்

ஷாபியீ – ஹனபீ

ஆசிரியர்

மௌலவி, அஃப்ஸலுல் உலமா

M. ஷம்சுத்தீன் ஜமாலி M.A., M.Phil

வெளியீடு :

பஷாரத் பப்ளிஷர்ஸ்

83, அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை - 600 001.

போன் : 044 - 2522 5028

احكام الاضحية والعقيقة

குர்பானியின் சட்டங்களும் அகீகாவின் முறைகளும்

(ஷாபியீ - ஹனபி)

المولوى : شمس الدين الفاضل الجمالى

نائب العميد – الكلية العربية الجمالية

வெளியீடு

பஷாரத் பப்ளிஷர்ஸ்

NO.83, அங்கப்ப நாயக்கன் தெரு

சென்னை-600001

போன்-25225028

[redacted]/=

பொருளடக்கம்

முன்னுரை

نحمده ونصلي على رسوله الكريم

குர்பானியின் சட்டங்கள் குறித்து பல நூல்கள் வெளிவந்திருப்பினும், காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு சில முக்கிய சட்டங்களை இந்நூலில் தொகுத்துள்ளேன். இந்நூலை படித்து படித்ததின் படி செயல்படுவருக்கு அல்லாஹ் சொர்கத்தை வழங்குவானாக! இந்நூலை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை படித்து சரிபார்த்துக்கொடுத்த நாடறிந்த நாவலரும் கைருல் பரிய்யா அரபிக்கல்லூரியின் முதல்வருமான மௌலவி அல்ஹாபிழ், அல்ஹாஜ் **M.**ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி எம்.ஏ. ஹழ்ரத் அவர்களுக்கும், உடனிருந்து அச்சுப்பிழைகளை சரிபார்த்துக் கொடுத்து உதவிய புரசைவட்டார ஜமாத்துல் உலமாவின் தலைவரும், தமிழ் மாநில அ.ஃ.ப்ஸலுல் உலமா பேரவையின் பொருளாலருமான அன்புச்சகோதரர் மௌலவி அல்ஹாபிழ், **V.S.** அன்வர் பாதுஷா உலவி எம்.ஏ. எம்.பில் ஹழ்ரத் அவர்களுக்கும், அச்சுக்கோர்வையை வெகு துரிதமாக செய்து கொடுத்த அன்புச்சகோதரர் மௌலவி. **H.**ஷாகுல் ஹமீது அருஸி பாஜில் ஜமாலி ஹழ்ரத் அவர்களுக்கும் இன்னும் இந்நூலை வெளியிட முன்வந்த **பஷாரத் பப்ளிஷர்ஸ்** நிருவனத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தேதி: 7 - 1- 2005

இப்படிக்கு

மௌலவி **M.**ஷம்சுத்தீன் ஜமாலி எம்,ஏ.எம்.பில்

செயலாளர்: தமிழ் மாநில அ.ஃ.ப்ஸலுல் உலமா பேரவை

பொருளடக்கம்

உள்ளே....

PAYANAM GRAPHICS
MASJID MUBARAK
NO.16,PILKINGTON ROAD
AYANAVARAM
CHENNAI-23

பொருளடக்கம்

بسم الله الرحمن الرحيم

குர்பானி பற்றிய திருக்குர்ஆன் வசனங்கள்.

فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ

எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது குர்பானியும் கொடுப்பீராக. (108:2)

وَيَذْكُرُوا اسْمَ اللهِ فِي أَيَّامٍ مَعْلُومَاتٍ عَلَى مَا رَزَقَهُمْ مِنْ بَهِيمَةِ الأَنْعَامِ وَكُلُوا مِنْهَا وَأَطْعِمُوا الْبَائِسَ الْفَقِيرَ

குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ள (ஆடு, மாடு, ஒட்டகம்) போன்ற கால்நடை பிராணிகள் மீது அல்லாஹ்வின் பெயரைக்கூறி குர்பானி கொடுப்பார்கள். நீங்களும் " அதிலிருந்து சாப்பிடுங்கள். கஷ்டப்படும் ஏழைக்கும் வழங்குங்கள். (அல்குர்ஆன் 22:28)

குர்பானி பற்றிய நபிமொழிகள்

حَدَّثَنَا مُسْلِمٌ : قَالَ حَدَّثَنَا شُعْبَةُ عَنِ الأَسْوَدِ عَنْ جُنْدُبٍ قَالَ: صَلَّى النَّبِيُّ صَلَّى الله عليه وسَلَّمَ يَوْمَ النَّحْرِ ثُمَّ خَطَبَ :ثُمَّ ذَبَحَ وَقَالَ:مَنْ ذَبَحَ قَبْلَ اَنْ يُصَلِّيَ فَلْيَذْبَحْ اُخْرى مَكَانَهَا وَمَنْ لَمْ يَذْبَحْ فَلْيَذْبَحْ بِاسْمِ اللهِ

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் தொழுது விட்டு பின்பு உரையாற்றினார்கள். அதன் பிறகு குர்பானி கொடுத்தார்கள். மேலும் "யார் தொழுகைக்கு முன் குர்ப்பானி கொடுத்து விட்டாரோ அவர் மற்றொன்றை அறுத்து குர்பானி கொடுக்கட்டும். யார் அறுக்கவில்லையோ அவர் அல்லாஹ்வின் பெயர் கூறி அறுக்கட்டும் என்று கூறினார்கள்.
.அறிவிப்பாளர்: ஜுன்துப் (ரலி) நூல்: புகாரி.

عَنْ اِبْنِ عُمَرَرضى الله عنه قَال: اَقَامَ رَسُوْلُ الله صلى الله عليه وسلمَ بِالْمَدِيْنَةِ عَشْرَسِنِيْنَ يُضَحِّيْ (رواه الترمذي)

.நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதினாவில் இருந்த பத்து ஆண்டுகளும் குர்பானி கொடுத்து வந்துள்ளார்கள்.
அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) நூல்: திர்மிதி

عَنْ اَبِي هريرة رضى الله عنه قَال: قَالَ رَسُوْلُ الله صَلّى الله عليه وسلمَ مَنْ كَانَ لَهُ سعَةٌ وَلَمْ يُضَحِّ فَلاَ يَقْرَبَنَّ مُصَلاّ نَا

.நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்:- வசதி இருந்தும் குர்பானி கொடுக்காதவர் பெருநாள் தொழுமிடத்திற்கு வர வேண்டாம்.
-அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா (ரலி)

பொருளடக்கம்

عَنْ اَنَسٍ قَالَ : ضَحَّى رَسُوْ لَ اللهِ بِكَبْشَيْنِ اَمْلَحَيْنِ اَقْرَنَيْنِ ذَبَحَهُمَا بِيَدِهِ وَسَمَّى وَكَبَّرَ قَالَ : رَأَيْتُهُ وَاضِعًا قَدَمَهُ عَلى صِفَاحِهِمَا وَيَقُوْلُ بِسْمِ اللهِ وَاللهُ اَكْبَرُ (متفق عليه)

.நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொம்புகளுடைய வெள்ளை நிறம் கொண்ட இரண்டு செம்மறி ஆட்டுக்கிடாய்களை அவற்றின் கழுத்துக்கு அருகிலுள்ள உறுப்பின் மீது தன் காலைவைத்து அல்லாஹ்வின் பெயர் சொல்லி தக்பீர் கூறி; அறுத்து குர்பானி கொடுப்பார்கள்.

அறிவிப்பாளர் :அனஸ் பின் மாலிக் , நூல் - புகாரி, முஸ்லிம்.

عَنْ عَائِشَةَ قَالَتْ :قَالَ رَسُوْلَ اللهِ صلى الله عليه وسلم مَا عَمِلَ ابْنُ ادَمَ مِنْ عَمَلٍ يَوْمَ النَّحْرِ اَحَبَّ اِلَى اللهِ مِنْ اِهْرَاقِ الدَّمِ وَاِنَّهُ لَيَأْتِيْ يَوْمَ الْقِيَامَةِ بِقُرُوْنِهَا وَاَشْعَارِهَا وَاَظْلاَفِهَا وَاِنَّ الدَّمَ لَيَقَعُ مِنَ اللهِ بِمَكَانٍ قَبْلَ اَنْ يَقَعَ بِالاَرْضِ فَطَيِّبُوْا بِهَا نَفْسًا (الترمذى)

.நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்:-

பொருளடக்கம்

ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று ஆதமுடைய மகனின் செயல்களில் குர்பானி கொடுப்பதைவிட மேலான எந்த காரியமும் அல்லாஹ்வின் பிரியத்தைப்பெருவதில்லை. மறுமை நாளில் குர்பானி செய்யப்பட்ட பிராணியானது தன் கொம்பு, முடி, குளம்புகள் ஆகியவைகளுடன் வரும். நிச்சயமாக குர்பானியின் இரத்தம் பூமியில் விழும் முன் அது அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹு) நூல்: திர்மிதி

عَنْ زَيْدِ بْنِ اَرْقَمِ قَالَ : قَالَ اَصْحَابُ رَسُوْلُ اللهِ يَارَسُوْلَ اللهِ مَ
هٰذِهِ الاَضَاحِيُّ؟ قَالَ :سُنَّةُ اَبِيْكُمَ اِبْرَاهِيْمُ عَلَيْهِ السَّلاَم قَالُوْا فَمَا لَ
فِيْهَا يَارَسُوْلَ اللهِ ! قَالَ بِكُلِّ شَعْرَةٍ حَسَنَةٌ قَالُوْا فَالصُّوْفُ يَارَسُ
لَ اللهِ قَالَ :بِكُلِّ شَـــعْرَةٍ مِنَ الصُّوْفِ حَسَنَةٌ (احمد ابن ماجه)

நபித்தோழர்கள் நபி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், இந்த உள்ஹியா (குர்பானி) எதற்காக? என்று கேட்ட பொழுது " இது உங்கள் தந்தை இப்றாஹீம் உடைய வழிமுறையாகும்" என்று பதில் கூறினார்கள். பிறகு அவர்கள் இதனால் எங்களுக்கு எவ்வளவு நன்மை கிடைக்கும் என்று கேட்ட பொழுது அதன் ஒவ்வொரு உரோமத்திற்(முடிக்) கும் ஒரு நன்மையுண்டு என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: ஜைது பின் அர்கம் , நூல்: இப்னு மாஜா

பொருளடக்கம்

عَنْ حَبَشٍ قَالَ : رَأَيْتَ عَلِيًّا يُضَحِّى بِكَبْشَيْـــنِ فَقُلْتُ لَهُ مَا هذَا ؟ فَقَالَ : انَّ رَسُـــوْلَ اللهِ صلى الله عليه وسلم اَوْصَانِيْ اَنْ اُضَحِّيْ عَنْهُ فَاَنَا اُضَحـــيِّ عَنْهُ

ابو داوٗد-

ஹழ்ரத் அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் இரண்டு ஆடுகளை அறுத்து குர்பானி கொடுக்கக்கண்டு அதற்கான காரணத்தை வினவினேன். அதற்கு அவர்கள் (ஒன்று எனக்காக) மற்றொன்று நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்காக, காரணம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நான் அவர்களுக்காக குர்பானி கொடுக்க வேண்டும் என எனக்கு உபதேசம் செய்திருந்தார்கள்.

அறிவிப்பாளர்: ஹனஷ் (ரலி) நூல்: அபூதாவூத்

حكم الاضحية

குர்பானியின் சட்டம்

اَلْاُضْحِيَّةُ سُنَّةٌ عَيْنٍ مُؤَكَّدَةٍ يُثَابُ فَاعِلُهَا وَلاَ يُعَاقَبُ تَارِكُهَا وَهذَا الْقَدْرُ مُتَّفَقٌ عَلَيْهِ فِى الْحَقِيْقَةِ

பொருளடக்கம்

குர்பானி கொடுப்பது கட்டாய சுன்னத் (நபிவழி) ஆகும். ஆதை நிறைவேற்றுபவருக்கு நற்கூலி வழங்கப்படும். அதை விட்டவருக்கு தண்டனை வழங்கப்படாது. இதுதான் உண்மையில் ஏகோபித்த அளவுகோளாகும்.

-அல் பிக்ஹ் அலல் மாதாஹிபில் அர்பஅ பக்கம் :716

وَلكِنَّ الْحَنَفِيَّةَ قَالُوْا :وَأنَّهَا سُنَّةُ عَيْنٍ مُؤَكَّدَةِ لاَ يُعَذَّبُ تَارِكُهَا بِا لنَّارِ وَلكِنْ يُحْرَمُ مِنْ شَفَاعَةِ النَّبِي صلى الله عليه وسلم وَيُعَبِّرُوْنَ عَنْ ذَالِكَ بِا الْوَاجِبِ.

ஹனபி மத்ஹபின்படி : குர்பானி கொடுப்பது கட்டாய சுன்னத் (நபிமொழி) ஆகும். அதைவிட்டவர் நரகத்தில் தண்டிக்கப்படமாட்டார். ஆயினும் அவருக்கு மறுமையில் நபி (ஸல்) அவர்களின் பரிந்துரை (ஷபாஅத்) கிடைக்காது. எனவே தான் ஹனபி மத்ஹபில் இக்குர்பானி வாஜிப் (கடமை) என்று கூறப்பட்டுள்ளது.

-அல்பிக்ஹு அலல் மதாஹிபில்அர்பஆ - பக்கம் :716

اَلشَّافعيَّةُ قَالُوْا: هِيَ سُنَّةُ عَيْنٍ لِلْمُنْفَرِدِ, وَسُنَّةُ كِفَايَةِ لأَهْلِ بَيْتِ وَاحِدِ أَوْ بُيُوْت مُتَعَدِّدَة تَلْزَمُ نَفَقَتُهُمْ شَخْصًا وَاحِدًا بِمَعْنى أنَّهُ اذَا فَعَلَهَا مَنْ تَلْزَمُهُ نَفَقَتُهُمْ سَقَطَ الطَّلَبُ عَنْهُمْ . فَلاَ يُنَافِى أنَّهَا تُسَنُّ لِكُلِّ مِنْهُمْ .

பொருளடக்கம்

ஷாபிஈ மத்ஹபில் குர்பானி கொடுப்பது தனி நபருக்கு சுன்னத் அய்ன் (பலமான சுன்னத்) ஆகும். குடும்பபொறுப்புதாரி க்கு பர்லுக்கிபாயா ஆகும். ஒரு தனிமனிதன் ஒரு வீட்டிற்கோ அல்லது பல வீட்டிற்கோ பொறுப்பாளியாக இருந்து அவைகள் அனைத்தும் அவரது செலவில் இயங்கி வரும்போது அவர்கள் கொடுக்கும் குர்பானி மூலம் அவ்வீடுகளில் வசித்துவரும் அனைவரது கடமையையும் நீங்கிவிடும். ஆதே நேரத்தில் ஒவ்வொரு தனிநபரும் குர்பானி கொடுப்பது "சுன்னத்" என்பது இல்லை என்று ஆகாது.

-அல்பிக்ஹு அல்லல் மதாஹிபில் அர்பஆ .பக்கம் 716

விளக்கம்: குடும்ப பொறுப்பாளி குர்பானி கொடுத்தால் குடும்ப அங்கத்தினரின் கடமைநீங்கிவிடும். குற்றம் பிடிக்கப்படமாட்டார்கள். பொறுப்பாளி குர்பானி கொடுத்து விட்டதால் குடும்ப உறுப்பினர்கள் குர்பானி கொடுக்கக்கூடாது என்பது அல்ல. கொடுத்தால் சுன்னத் (நபிவழியை) நிறைவுபடுத்திய நன்மை கிடைக்கும்.

شروط الاضحية

குர்பானிக்கான நிபந்தனைகள்

مِنْ شُرُوْطِ الأُضْحِيَةِ اَلْقُدْرَةُ عَلَيْهَا فَلاَ تُسَنُّ لِلْعَاجِزِ عَنْهَا وَمِنْهَا الْحُرِّيَةُ فَلاَ تُسَنُّ لِلْعَبْدِ

குர்பானி கடமையாவதற்கு பின்வரும் நிபந்தனைகள் இருக்கவேண்டும் அவை:- சக்தி உள்ளவராக (இயன்றவராக) இருக்க வேண்டும். இயலாதவராக இருக்கக்கூடாது. சுதந்தரமானவராக இருக்க வேண்டும். அடிமையாக இருக்கக்கூடாது.

-அல் பிக்ஹு அலல் மதாஹிபில் அர்பஆ.பக்கம்:716, 717

حَدُّ الْقُدْرَةِ عَلَى الأُضْحِيَّة

குர்பானி கொடுக்க சக்தி (வசதி) உள்ளவர்

اَلْحَنَفِيَّةُ قَالُوا : اَلْقَادِرُ عَلَيْهَا هُوَ الَّذِيْ يَمْلِكُ مِأَتَيْ دِرْهَمٍ اَوْ مِأَةَ دِرْهَمٍ يَزِيْدُ عَنْ مَسْكَنِهِ وَثِيَابِ اللُّبْسِ وَالْمَتَاعِ الَّذِى يَحْتَاجُهُ . وَكَذلِكَ اَنْ يَكُوْنَ مُقِيْمًا فَلاَ تَجِبُ عَلَى الْمُسَافِرِ. وَاِنْ تَطَوَّعَ بِهَا اَجْزَأَتْهُ وَاِذَا اشْتَرَى شَاةً لِيُضَحِّيَ بِهَا ثُمَّ سَافَرَ قَبْلَ حُلُوْلِ وَقْتِهَا فَاِنَّهُ يَبِيْعُهَا وَلاَ تَجِبُ عَلَيْهِ الأُضْحِيَّةُ وَكَذَا لَوْ سَافَرَ بَعْدَ دُخُوْلِ الْوَقْتِ قَبْلَ اَنْ يَذْبَحَ فَاِنَّ الأُضْحِيَّةَ لاَ تَجِبُ عَلَيْهِ وَتَجِبُ عَلَى الْحَاجِ اِنْ لَمْ يَكُنْ مُسَافِرًا بِاَنْ كَانَ مِنْ اَهْلِ مَكَّةَ

குர்பானி கொடுக்க சக்திஉள்ளவர் என்பதற்கு ஹனபி மத்ஹபில் பின் வருமாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அவை: குர்பானி கொடுப்பவர் சொந்தமாக இருநூறு திர்ஹம் வைத்திருக்கவேண்டும். அல்லது தேவையான பண்டங்கள், உடுத்த உடை, குடியிருக்க வீடு ஆகியவைகள் போக மேல் மிச்சமாக நூறு திர்ஹம் வைத்திருக்க

வேண்டும். அவ்வாறே குர்பானி கொடுப்பவர் உள்ளூரில் இருக்க வேண்டும். பயணத்தில் இருக்கக்கூடாது. காரணம் பயணிகள் மீது குர்பானி கடமையல்ல. பயணத்திலிருந்தும் ஒருவர் விரும்பி (நபிலானவணக்கத்தைப்போன்று) இக்காரியத்தை செய்தால் அவருக்கு அது நிறைவேறும் (அதற்கான நன்மை அவருக்கு கிடைக்கும்) அவர் குர்பானி கொடுப்பதற்காக ஆட்டை வாங்கி குர்பானிக்கான நேரம் வரும் முன் பயணம் செய்து (அங்கிருந்து புறப்பட்டு) விட்டால் அவர் அந்த ஆட்டை விற்றுக்கொள்ளலாம். அவருக்கு குர்பானி கடமையாகாது. அவ்வாறே குர்பானிக்கான நேரம் வந்தபோதிலும் குர்பானி பிராணியை அறுப்பதற்கு முன் அங்கிருந்து கிளம்பி (பயணம் செய்து) விட்டாலும் அவர் மீது குர்பானி கடமையாகாது. ஹஜ் செய்ய வந்தவர் பயணிஅல்லாத உள்ளூரான மக்காவாசியைப்போன்று இருந்தால் குர்பானி கொடுப்பது அவர் மீது கடமை (வாஜிப்) ஆகும்.

-அல்பிக்ஹு" அலல் மதாஹிபில் அர்பஆ

குறிப்பு :ஹனபி மத்ஹபின்படி ஸதகதுல் பித்ரு கொடுப்பது வாஜிபானவர் மீது குர்பானி கொடுப்பது வாஜிப்ஆகும். ஜகாத் கொடுக்கும் அளவிற்கு வசதியிருக்கவேண்டும் என்று நிபந்தனை இல்லை. எவரிடத்தில் ஏழரை தோலா தங்கம் (82 1|2 கிராம்) அல்லது ஐம்பத்தி இரண்டரை தோலா வெள்ளியோ (612 கிராம் 350 மில்லி கிராம்) இருந்தால் அவர்மீது ஸதகதுல் பித்ர் கொடுப்பது வாஜிப் ஆகும். அல்லது இந்த மதிப்புள்ள இல்லாத் தேவைகளை விட்டும் அப்பாற்பட்டுள்ள சாமான், வீடு , வாகனம், தொழில்கருவிகள், உடுத்தும் துணிகள்

பொருளடக்கம்

ஆகியவைகள் அல்லாதவைகள் இருந்தால் அவர் மீது குர்பானி வாஜிப் ஆகும்.

-நூல் :பிக்ஹின் கலைக்களஞ்சியம். பக்கம் -531

ஷாபிஈ மத்ஹபின்படி, தனக்கும், தன்னிடமிருந்து ஜீவனாம்சம் பெறுபவர்களுக்கும் தேவையான செலவு போக, பணம் மீதியிருந்தால் மட்டும் குர்பானி கொடுப்பது சுன்னத் முஅக்கதாவாகும். வசதிவாய்ப்பு இருந்தும் குர்பானி கொடுக்காமலிருப்பது மக்ரூஹ் ஆகும்.

நூல்: ஷா.ஃ.பிஈ பிக்ஹின் சட்டக்களஞ்சியம், பக்கம் :390

البلوغ

பருவம் எய்தல்

اَلْحَنَفِيَّةُ قَالُوْا: اَلْبُلُوْغُ لَيْسَ شَرْطًا لِوُجُوْبِهَا فَتَجِبُ عَلَى الصَّبِيِّ عِنْدَهَا وَيُضَحِّى وَلِيُّهُ مِنْ مَالِ الصَّبِيِّ اِنْ كَانَ لَهُ مَالٌ, فَلاَ يُضَحِّيْ الْاَبُ عَنْ وَلَدِهِ الصَّغِيْرِ وَعِنْدَ مُحَمَّدٍ رحمة الله عليه شَرْطٌ فَلاَ تَجِبُ الْأُضْحِيَّةُ فِى مَالِ الصَّبِيِّ

குர்பானிகொடுப்பவருக்கான வயது வரம்புகள் பின்வருமாறு கவனிக்கப்படுகின்றன. அவை: வயதுக்கு வந்தவர்தான் குர்பானி கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. சிறுவர் மீதும் குர்பானி கடமை (வாஜிப்) ஆகும். அச்சிறுவருக்கென தனியாக (சொந்தமாக) செல்வம் இருக்குமானால் அதிலிருந்து அச்சிறுவனின் பொறுப்பாளர் குர்பானிகொடுக்க வேண்டும். முஹம்மது (ரஹ்மத்துல்லாஹி

பொருளடக்கம்

அலைஹி) விதிக்கும் நிபந்தனைபயின் படி சிறுவனின் சொத்தில் குர்பானி கடமை (வாஜிப்) ஆகாது.

-அல் பிக்ஹு அலல் மதாஹிபில் அர்பஆ

விளக்கம் :குர்பானி கொடுக்க வேண்டிய சிறுவன் என்பது சொத்து உள்ள தாய், தந்தை இல்லாத பிள்ளை அல்லது தாய், தந்தை இருந்த போதிலும் தனக்கென தனியாக சொத்து வைத்திருக்கும் பிள்ளையைக்குறிக்கும்.

اَلشَّافِعِيَّةُ – قَالُوْا: لاَ تُسَنُّ لِلصَّغِيْرِ, فَا الْبُلُوْغُ شَرْطٌ لِسُنِّيَتِهَا , وَكَذَالِكَ الْعَقْلُ

ஷாபிஈ மத்ஹபின் படி: குர்பானி கொடுப்பவர் விஷயத்தில் அறிவும் பருவம் எய்தலும் (வயதுக்கு வருதலும்) கவனிக்கத்தக்க நிபந்தனைகளாகும் அவ்விரண்டுமின்றி குர்பானி சுன்னத் ஆகாது.

وقت الاضحية

குர்பானியின் நேரம்

مَنْ ذَبَحَ قَبْلَ اَنْ يُصَلِّيَ فَلْيَذْبَحْ اُخْرى مَكَانَهَا:

யார் தொழுகைக்கு முன் குர்பானி கொடுத்துவிட்டாரோ அவர் மற்றொன்றை அறுத்து குர்பானி கொடுக்கட்டும். நபிமொழி -நூல்: புகாரி

பொருளடக்கம்

وَمِنهَا الْوَقْتُ الْمَخصُوْصُ, فَلاَ تَصِحُّ اذا فعلَتْ قَبْلَهُ اَوْ بَعْدَهُ, اَلْحَنَفِيَّةُ قَالُوْا: يَدْخلُ وَقْتُ الاُضْحِيَّة عِنْدَ طُلُوْعِ فَجرِ يَوْمَ النَّحرِ وَهُوَ يَوْمُ الْعِيْدِ وَيَستَمِرُّ اِلَى قُبَيْلِ غُرُوْبِ الْيَوْمِ الثَّالث, وَهذَا الْوَقْتُ لاَ يَختَلِفُ فِيْ ذَاتِه بِا النِّسبَة لِمَنْ يُضَحِّيْ فِى الْمِصْرِ اَوْ يُضَحِّي فِي الْقَرْيَةِ وَلكِنْ يُشتَرَطُ فِى صِحَّتِهَا لِلْمِصْرِيِّ اَنْ يَكُوْنَ الذَّبحُ بَعْدَ صَلاَةِ الْعِيْد وَلَوْ قَبلَ الْخُطْبَة الاَّ اَنَّ الاَفْضَلَ تَأخِيرُهُ الى مَا بَعْدَ الْخُطْبَة فَاذَا ذَبَحَ سَاكِنُ الْمِصْرِ قَبلَ صَلاَة الْعِيْد لاَ تَصِحُّ اُضْحِيَتُهُ وَيَأكُلُهَا لَحْمًا فَاذاَ عُطِّلَتْ صَلاَةُ الْعِيْد يَنْتَظِرُ بِهَا حَتّى يَمضِي وَقْتُ الصَّلاَة وَوَقْتُهَا مِنْ اِرْتِفَاعِ الشَّمْسِ اِلَى الزَّوَالِ ثُمَّ يَذْبَحُ بَعْدَ ذلِك . اَمَّا الْقَرْوِى –سَاكِنُ الْقَرْيَة فَانَّهُ لاَ يُشتَرَطُ لَهُ ذلِكَ الشَّرْط بَلْ يَذْبَحُ بَعْدَ طُلُوْعِ فَجرِ النَّحرِ, وَاِذاَ اَخطَأَ النَّاسُ فِى يَوْمِ الْعِيْد فَصَلَّوْا وَضَحَّوْا ثُمَّ بَانَ لَهُمْ اَنَّهُ يَوْمَ عَرَفَةَ اَجزَأَتْهُمْ صَلاَ تُهُمْ وَاُضحِيَّتُهُمْ وَاِذا تُرِكَتْ ذَبِيْحَةُ الاُضْحِيَّة حَتَّى فَاتَ وَقــتُهَا يَتَصَدَّقُ بِهَا حَيَّةً

குர்பானி கொடுப்பதற்கென குறித்த நேரம் உண்டு. அது தவறினாலோ அல்லது அது வரும் முன் கொடுத்தாலோ அக்குர்பானி செல்லாது. இதன் விபரம் ஹனபி மத்ஹபில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அதாவது : பெருநாள்

தினத்தன்று காலை வைகறை (ஃபஜ்ர்) உதயமாகும் பொழுது துவங்கும் குர்பானிக்கான நேரம் மூன்றாவது நாள் சூரியன் மறைவுக்கு சற்று முன்பு வரை நீடிக்கிறது. குர்பானி கொடுப்பவர் நகரத்தில் (பட்டினத்தில்) வசிப்பவரானாலும், கிராமத்தில் வசிப்பவரானாலும் யாவரும் இந்த நேரத்தை கருத்தில் கொண்டு இதன் அடிப்படையில்தான் செயல்பட வேண்டும். நகரத்தில் குர்பானி கொடுப்பவர் பலிபிராணியை தொழுகைக்குப்பின் அறுக்கவேண்டும். தொழுகை முடிந்த பிறகு குத்பாவுக்கு முன்பும் அறுக்கலாம். ஆயினும் குத்பா முடியும் வரை தாமதித்து முடிந்தபின் அறுப்பதே சிறந்ததாகும். நகரத்தில் வசிப்பவர் பெருநாள் தொழுகைக்கு முன்பே குர்பானி பிராணியை அறுத்துவிட்டால் அந்த குர்பானி செல்லாது. உண்ணுவதற்கான சாதாரண இறைச்சியாகவே கனிக்கப்படும். பெருநாள் தொழுகைக்காக ஏற்பாடு செய்யப்படாமல் தொழுகையே நடக்க வில்லையானால்,

பெருநாள் தொழுகையின் நேரமான சூரியன் உதித்து உயரத்துவங்கியது முதற்கொண்டு ஜவால் நேரம் (நன்பகலுக்கு முன்பு) வரை எதிர்பார்த்திருந்து பின்பு குர்பானி பிராணியை அறுக்க வேண்டும். ஆனால் (பெருநாள் தொழுகை நடைபெறாத) கிராமத்தில் குர்பானி கொடுப்பவருக்கு இத்தகைய நிபந்தனைகள் கிடையாது. இவர் பெருநாளன்று அதிகாலை (சுபுஹ் சாதிக்) உதயமான பின் அறுத்து குர்பானி செய்யலாம். பெருநாளுக்கு முதல் நாளான அரபா நாளை பெருநாள் என்று நினைத்துக்கொண்டு தவறுதலாக செயல்பட்டுவிட்டால் அவர்களது பெருநாள் தொழுகையும், குர்பானியும் செல்லுபடியாகும்.

(ஏற்றுக்கொள்ளப்படும்) குர்பானிக்கான நேரம் முடியும் வரை குர்பானி பிராணியை அறுக்க முடியாமல் விடுபட்டுவிட்டால் உயிரோடு அதை தர்மம் செய்து விட வேண்டும்.

குறிப்பு: ஹனபி மத்ஹபில் பகலில் குர்பானி கொடுக்க வேண்டும். இரவில் கொடுப்பது மக்ருஹ் தன்ஜீஹ் ஆகும்.

اَلشَّافِعِيَّةُ قَالُوْا: يَدْخُلُ وَقْتُ ذَبْحِ الأُضْحِيَّةِ . بَعْدَ مُضِيٍّ قَدْرِ رَكْعَتَيْنِ وَخُطْبَتَيْنِ بَعْدَ طُلُوْعِ الشَّمْسِ يَوْمَ عِيْدِ النَّحْرِ, وَاِنْ لَمْ تَرْتَفِعِ الشَّمْسُ قَدْرَ رُمْحٍ وَلٰكِنَّ الاَفْضَلَ تَأْخِيْرُهُ اِلى مُضِيِّ ذٰلِكَ مِنْ اِرْتِفَاعِهَا , وَيَسْتَمِرُّ اِلى اٰخِرِ اَيَّامِ التَّشْرِيْقِ الثَّلاَثَةِ وَيَصِحُّ الذَّبْحُ لَيْلاً اَوْ نَهَارًا بَعْدَ دُخُوْلِ وَقْتِهَا . اِلاَّ اَنَّهُ يُكْرَهُ فِى اللَّيْلِ اِلاَّ لِحَاجَةٍ : كَاشْتِغَالِه نَهَارًا بِمَا يَمْنَعُهُ مِنَ التَّضْحِيَةِ اَوْ لِمَصْلَحَةٍ : كَسُهُوْلَةِ حُضُوْرِ الْفُقَرَاءِ لَيْلاً.

ஷாபிஈ மத்ஹபின்படி குர்பானிக்கான நேரம்; பெருநாளன்று சூரியன் உதயமானபின்பு இரண்டு ரக்அத் தொழுகை, மற்றும் இரண்டு குத்பா உடைய நேரம் சென்றதற்கு பின்பு துவங்கி மூன்றாவது நாள் சூரியன் மறைவுக்கு சற்று முன்பு வரை நீடிக்கிறது. பெருநாளன்று சூரியன் ஒரு ஈட்டிஅளவு உயர்வதற்கு முன்புகூட குர்பானிபிராணியை அறுக்கலாம். ஆயினும் சூரியன் உதயமானது முதற்கொண்டு ஒரு ஈட்டியின் அளவு உயரும்வரை தாமதம் செய்வதே சிறந்ததாகும். இரவிலும்

பகலிலும் எப்பொழுதும் குர்பானி கொடுக்கலாம். இருப்பினும் பகலில் பணிபுரிபவராக இருப்பார், இவர் பகலில் செய்யும் வேலை குர்பானி அறுத்துப்பங்கிட தடையாக இருக்கலாம். இதுபோன்ற காரணம் இருக்கும்போது இரவில் குர்பானி கொடுக்கலாம். தக்ககாரணமின்றி, அவசியமின்றி இரவில் குர்பானி கொடுப்பது மக்ருஹ் ஆகும். அல்லது இரவில் கொடுத்தால் ஏழைகள் வந்து குர்பானி இறைச்சியை வாங்கிசெல்வதற்கு வசதியாக இருக்குமென்று இருந்தாலும் இரவில் குர்பானி கொடுக்கலாம்.

-அல் பிக்ஹு அலல் மதாஹிபில் அர்பஆ

குறிப்பு: குர்பானிக்கான கால அளவு ஹனபி மத்ஹபில் பிறை 10, 11, 12, ஆகிய மூன்று நாட்களும் ஷாபிஈ மத்ஹபில் பிறை 10, 11, 12, 13 ஆகிய நான்கு நாட்களும் ஆகும்.

اَلاِشْتِرَاكُ فِى الأُضْحِيَّةِ

கூட்டுக் குர்பானி

عَنْ جَابِرٍ اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عليه وسلم قَالَ : اَلْبَقَرَةُ عَنْ سَبْعَةٍ وَالْجَزُوْرُ عَنْ سَبْعَةٍ – رواه مسلم

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஏழுபேருக்காக ஓர் ஒட்டகத்தையும் ஏழு பேருக்காக ஒரு மாட்டையும் (கூட்டு சேர்ந்து) குர்பானி கொடுக்கலாம். (அறுத்து பலியிடலாம்)

அறிவிப்பாளர் :ஜாபிர் (ரலியல்லாஹு அன்ஹு)

நூல் :முஸ்லிம்

பொருளடக்கம்

يَصِحّ الاِشْتِرَاكُ فِى الاُضْحِيَّةِ اذَا كَانَتْ مِنَ الابِلِ وَالْبَقَرِ, وَاذَا اشْتَرَكَ سَبْعَةٌ فِى بَقَرَةٍ اَوْ نَاقَة يَصِحُّ اذَا كَانَ نَصِيْبُ كُلُّ وَاحِد مِنْهُمْ لاَ يَقِلُّ عَنْ سَبْعٍ فَاِنْ كَانُوا اَكْثَرَ مِنْ سَبْعَةٍ لاَ يَصِحُّ , اَمَّا اَنْ كَانُوْا اَقَلّ فَيَصِحُّ وَلاَ تَصِحُّ الاُضْحِيَّةُ بِغَيْرِ النَّعَمِ مِنَ الْاِبِلِ وَالْبَقَرِ وَالْجَامُوْسِ وَالْغَنَمِ

ஒட்டகை, மாடு இவற்றில் ஏழுபேர் கூட்டாகச்சேர்ந்து குர்பானி கொடுக்கலாம். ஏழுபேருக்கும் ஏழு பாங்கு குறையாமல் சரியாக இருக்கவேண்டும். ஏழுபேருக்கு அதிகமானோர் கூட்டுசேர்ந்தால் குர்பானி செல்லாது. ஆனால் ஏழுபேருக்கு குறைவானோர் சேர்ந்து கொடுத்தால் குர்பானி செல்லும். ஆடு, மாடு, ஒட்டகம், எருமை போன்ற கால்நடைகளே குர்பானிக்கு தகுதிபெற்றவைகளாகும்.

اَلْحَنَفِيَّةُ –قَالُوْا: اَلشَّاةُ اَفْضَلُ مِنْ سَبْعِ الْبُدْنَةِ – اَلْبَقَرَة اَوِالْجَمَلِ وَنَحْوِهِمَا اذَا اِسْتَوَيَا فِى اللَّحَمِ وَالْقِيْمَةِ وَالْكَبَشُ لفضَلُ مِنَ النَّعجَة اذَا اِستَوَيَا فِى الثَّمَنِ وَالْقِيْمَةِ اَيْضًا . وَالاُنْثى مِنَ الْمَعْزِ اَفْضَلُ التَّيسِ اِذَا اِستَوَيَا قِيْمَةً وَالاُنْثى مِنَ الابِلِ وَالبَقَرِ اَفْضَلُ اِذَا اِسْتَوَيَا اَيْضًا الفقه على المذاهب الاربعة

பொருளடக்கம்

ஹனபி மத்ஹபின் படி விலைமற்றும் இறைச்சியின் அளவு ஒன்றுபடுமானால் ஏழு பேர் சேர்ந்து ஒரு மாடு அல்லது ஓர் ஒட்டகத்தை அறுப்பதை விட ஒவ்வொரு வரும் ஓர் ஆட்டை அறுத்து குர்பானி கொடுப்பதே மிக ஏற்றதாகும். அதுபோன்று செம்பறி ஆட்டிலும் விலையும், இறைச்சியின் அளவும் சமமாகுமானால் பெண்ணைவிட ஆண்செம்பறி ஆட்டை அறுத்து குர்பானி கொடுப்பதே சிறந்ததாகும். அதுபோன்றே வெள்ளாட்டில் விலையும், இறைச்சியின் அளவும் ஒன்றுபடும்போது ஆணைவிட பெண் ஆடே சிறந்ததாகும். ஒட்டகம், மாடு இவ்விரண்டிலும் கூட தொகையும், இறைச்சியின் அளவும் ஒன்றுபடும் போது ஆண் இனத்தைவிட பெண் இனமே மிகச்சிறந்ததாகும்.

-அல்பிக்ஹ் அலல் மதாஹிபில் அர்பஆ பக்கம் -722

குர்பானி பிராணிகளிடம் இருக்கக்கூடாத குறைகள்

عَنِ الْبَرَاءِ بْنِ عَازِبٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَامَ فِيْنَا رَسُوْلُ اللهِ صلى الله عليه وسلم فَقَالَ :اَرْبَعٌ لاَ تَجُوْزُ فِى الضَّحَايَا : اَلْعَوْرَاءُ الْبَيِّنُ عَوَرُهَا وَالْمَرِيْضَةُ الْبَيِّنُ مَرَضُهَا وَالْعَرْجَاءُ الْبَيِّنُ ظَلَعُهَا وَالْكَبِيْرَةُ الَّتِيْ لاَ تُنْقِيْ — رواه احمد —

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நான்கு பிராணிகளை குர்பானிக்கு செல்லாது என அடையாளம் காட்டி உள்ளார்கள். அவை (1) நன்கு தெளிவாக தெரியும் படியான கண்பொட்டையான பிராணி (2) வெளிப்படையாக தெரியும் அளவிற்கு நோயினால்

பாதிக்கப்பட்டுள்ள பிராணி (3) ஊனம் வெளிப்படையாக தெரியும் அளவிற்குள்ள நொண்டி நடக்கும் பிராணி 4, வயது முதிர்ந்த எலும்பு மஜ்ஜை பலவீனம்அடைந்த பிராணி .
அறிவிப்பாளர் : பர்ராஉ பின் ஆஸிப் (ரலியல்லாஹு அன்ஹு) நூல் : அஹ்மத்

وَعَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : اَمَرَنَا رَسُوْلُ اللهِ صلى الله عليه وسلم اَنْ نَسْتَشْرِفَ الْعَيْنَ وَالاُذُنَ وَلاَ نُضَحِّيْ
بِعَوْرَاءَ وَلاَ مُقَابَلَةٍ وَلاَ مُدَابِرَةٍ وَلاَ خِرْقَاءَ وَلاَ شَرْمَاءَ
— رواه احمد

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்களுக்கு பின்வருமாறு கட்டளை இட்டார்கள் அவை : நன்கு கவனித்து காதிலும், கண்ணிலும் குறையில்லாத பிராணியை குர்பானிக்காக தேர்ந்தெடுங்கள். ஒரு கண்குருடு, காதின் ஓரம் கிழிக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருக்கும் பிராணியையும் பின் காது கிழிக்கப்பட்டு தொங்கிக்கொண்டிருக்கும் பிராணியையும் காதுகள் இரண்டும் கிழிக்கப்பட்டு பிளந்திருக்கின்ற பிராணியையும் முன்பற்கள் விழுந்துவிட்ட பிராணியையும் குர்பானிக்கு தேர்ந்தெடுக்காதீர்கள்.
அறிவிப்பாளர் : அலி (ரலியல்லாஹு அன்ஹு) நூல்: அஹ்மத்

எலும்பினுள் உள்ள ஊன் உருகிய மிக மெலிந்த அல்லது வாலோ செவியோ அறுக்கப்பட்ட அல்லது கண்ணோ இல்லாத அல்லது பார்வை இழந்த அல்லது

பொருளடக்கம்

நொண்டியான அல்லது வெளிப்படையாக சதைப் பிடிப்பைத் தடுக்கும் நோயுள்ள பிராணிகள் குர்பானி கொடுப்பதற்கு தகுதியில்லாதவைகளும். கொம்பில்லாத அல்லது கொம்பு முறிந்த அல்லது பற்கள் இல்லாத அல்லது காய் அடிக்கப்பட்ட பிராணிகளை குர்பானி கொடுப்பது கூடும். 13வதுநாள் சூரியன் மறைந்த பின்பு குர்பானி கொடுத்தால் அல்லது குர்பானிக்குத் தகுதி இல்லாத பிராணிகளைக் குர்பானிக் கொடுத்தால் அது சாதாரண தர்மமாக ஆகுமே தவிர குர்பானியாக ஆகாது.

-நூல்: ஷாபிஈ பிக்ஹின் சட்டக்களஞ்சியம் , பக்கம் :391

ஹனபி மத்ஹபின்படி பால் மடுஅருந்த பிராணி, பிறப்பிலேயே ஒருகாது உள்ள பிராணி, ஆண்குறி, பெண்குறி இரண்டும் உள்ள பிராணி, குருடு, ஒற்றைக்கண், ஏதாவ்து உறுப்பு மூன்றில் ஒரு பங்கை விட அதிகம்போன பிராணி, பால்காம்பின் நுனி அறுந்துபோன பிராணி, வேரோடு கொம்பு வெளிவந்துவிட்ட பிராணி, போன்றவைகளின் குர்பானி கூடாது.

<u>சாப்பிடக்கூடாத உறுப்புகள்</u>

1.)இரண்டு விரைக்கொட்டை 2) அபம் 3) களலை 4)நீர்ப்பை 5) பித்து 6) ஆண்குறி 7) இரத்தம்.

குர்பானி பிராணி ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றில் எதுவாக இருந்தாலும் மேற்கண்ட உறுப்புகளை சாப்பிடக்கூடாது.

-ஹனபி பிக்ஹின் கலைக்களஞ்சியம்

பிராணிகளிடம் கவனிக்கத்தக்கவை

عَنْ جَابِرٍ رضي الله عنه قَالَ :قَالَ رسولُ الله صلى الله عليه وسلم لاَ تَذْبَحُوْا اِلاَّ مُسِنَّةً اِلاَّ اِنْ تَعَسَّرَ عَلَيْكُمْ فَتَذْبَحُوْا جَذَعَةً مِنَ الضَّأْنِ –رواه مسلم

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறியுள்ளார்கள்:

குர்பானிக்கு பல்முளைத்த பிராணியையே பயன்படுத்துங்கள். அது உங்களுக்கு கிடைப்பது சிரமமானால் மூன்று வயது செம்மறிஆட்டுக்குட்டியை அறுங்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் (ரலி) நூல்: முஸ்லிம்

ஷாபிஈ மத்ஹபின்படி, ஒட்டகம் ஐந்து வயது நிறைந்ததாகவும், மாடு மற்றும் வெள்ளாடும் இரண்டு வயது நிறைந்தவைகளாகவும், செம்மறி ஆடு ஒருவயது நிறைந்ததாகவும் இருந்தால் குர்பானி கொடுப்பதற்கு தகுதியானவைகளாகும்.

ஹனபி மத்ஹபின்படி ஒட்டகம் ஐந்து வருடம் நிறைந்ததாகவும் பசு, காளை, எருமை ஆகியவை இரண்டு வருடம் நிறைந்ததாகவும் ஆடாக இருந்தால் ஒருவருடம் நிறைந்ததுமாய் இருக்கவேண்டும்.

اَلتَّسْمِيَةُ عِنْدَ ذَبْحِ الأُضْحِيَّةِ

குர்பானி பிராணியை அறுக்கும்பொழுது அல்லாஹ்வின் பெயரைக்கூறுதல்

اَلتَّسْمِيَةُ شَرْطٌ فِى حِلِّ اَكْلِ كُلِّ ذَبِيْحَةٍ بِاتِّفَاقِ ثَلاَثَةٍ وَخَالَفَ الشَّافِعِيَّةُ : سَوَاءٌ أَكَانَتْ اَضْحِيَةً اَوْ غَيْرَهَا فَمَنْ تَرَكَ التَّسْمِيَةَ عَمْدًا لاَ تُؤْكَلُ ذَبِيْحَتُهُ , بِخِلاَفِ اِذَا تَرَكَهَا سَهْوًا فَاِنَّهَا تُؤْكَلُ

ஷாபிஈ மத்ஹபை தவிர மீதமுள்ள மூன்று (ஹனபி, மாலிக், ஹன்பலி) மத்ஹபுகளிலும் குர்பானி பிராணியாக இருந்தாலும் குர்பானி அல்லாத சாதாரன இறைச்சிக்காக மட்டும் அறுக்கப்படும்) பிராணியாக இருந்தாலும் அறுக்கும் போது அல்லாஹ்வின் (பிஸ்மில்லாஹ்) பெயரைக்கூறுவது முக்கிய நிபந்தனையாகும். அறுக்கும் போது வேண்டுமென பிஸ்மில்லாஹ்வை சொல்லாமல் விட்டுவிட்டால் அவ்வாறு அறுக்கப்படும் பிராணியின் இறைச்சியைச்சாப்பிடக்கூடாது. மறதியாக விடுபட்டிருந்தால் அந்த இறைச்சியை சாப்பிடலாம்.

اَلشَّافِعِيَّةُ —قَالُوْا : اَلتَّسْمِيَةُ لَيْسَتْ شَرْطًا فِى حِلِّ اَكْلِ الذَّبِيْحَةِ , فَلَوْ تَرَكَ التَّسْمِيَةَ عَمْدًا حَلَّتْ الذَّبِيْحَةُ , وَلَكِنَّ تَرْكَ التَّسْمِيَةِ مَكْرُوْهٌ , اَمَّا الذَّبِيْحَةُ الَّتِيْ يُحْرَمُ اَكْلُهَا فَهِيَ الَّتِى ذُكِرَ اِسْمُ غَيْرِ اللهِ عَلَيْهَا وَهِيَ الَّتِى كَانَتْ تُذْبَحُ لِلاَصْنَامِ .

ஷாபிஈ மத்ஹபில் பிஸ்மில்லாஹ்வைச்சொல்லித்தான் அறுக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. ஆயினும் பிஸ்மில்லாஹ்வை விடுவது மக்ருஹ் ஆகும். ஹறாமான இறைச்சி என்பது சிலைகளின் பெயர்களைப்போன்று அல்லாஹ் அல்லாத வேறு பெயரைக்கூறி , சிலைகளுக்காக அறுக்கப்பட்ட பிராணியின் இறைச்சியாகும். இதை சாப்பிடுவது ஹறாமாகும்.

குர்பானி கொடுக்கும்போது ஓத வேண்டிய துஆ

குர்பானி கொடுப்பவர் பிராணியை அறுக்கும் முன்

اِنِّي وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمٰوَاتِ وَالاَرْضَ حَنِيْفًا مُسْلِمًا وَمَا اَنَامِنَ الْمُشْرِكِيْن اِنَّ صَلاَتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِى لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ لاَ شَرِيْكَ لَهُ وَبِذَالِكَ اُمِرْتُ وَاَنَا مِنَ الْمُسْلِمِيْنَ

இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹி லில்லதீ பதரஸ்ஸமாவாதி வல் அர்ல ஹனீபன் முஸ்லிமன் வமா அன மினல் முஷ்ரிகீன். இன்ன ஸலாதீ வநுஸ்கீ வமஹ்யாய வமமாதீ லில்லாஹி ரப்பில் ஆலமீன். லாஷரீக லஹு வபிதாலிக உமிர்து வஅன மினல் முஸ்லிமீன்.

என்ற துஆவை ஓதிக்கொண்டு குர்பானி பிராணியின் முகத்தை மேற்கு பக்கமாக திருப்பி வைத்துக்கொண்டு அல்லாஹும்ம ஹாதா மின்க வஇலைக பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் (اَللّٰهُمَّ هٰذَا مِنْكَ وَاِلَيْكَ بِسْمِ اللهِ اَكْبَرْ) என்று சொல்லி அறுக்கவும். அறுத்து முடித்தப்பின்...

اَللّٰهُمَّ هذَا مِنْكَ وَلَكَ فَـتَـــتَقَبَّلْ مِنِّي كَمَا تَقَبَّلْتَ مِنْ خَلِيْلِكَ إِبْرَاهِيْمَ عَلَيْهِ السلام وَمِنْ حَبِيْـــبِكَ مُحَمَّدٍ صلى الله عليه وسلم

அல்லாஹு்ம்ம ஹாதா மின்க வலக பதகப்பல் மின்னீ கமா தகப்பல்த மின் கலீலிக இப்றாஹீம் (அலை) வமின் ஹபீபிக முஹம்மத் ஸல்லல்லாஹு் அலைஹி வஸல்லம்

.என்று சொல்லிக்கொள்ள வேண்டும். பிறருக்காக அறுப்பவராக இருந்தால் இதில் உள்ள "மின்னி" என்ற வார்த்தையை எடுத்து விட்டு அவ்விடத்தில் "மின்" என்ற வார்த்தையுடன் குர்பானி கொடுப்பவரின் பெயரைக்கூறிக்கொள்ளவும். காரணம் நபிகள் நாயகம் (ஸல்) குர்பானி கொடுக்கும் போது عَنْ مُحَمَّدٍ وَأُمَّتِه(முஹம்மதுக்காகவும் அவருடைய உம்மத்துக்காகவும்) என்றும் மற்றொரு அறிவிப்பில் وَهذَا عَنِّي وَعَمَّنْ لَمْ يُضَحِّ مِنْ أُمَّتِيْ (எனக்கும் எனது உம்மத்தில் வசதி இல்லாததால் குர்பானி கொடுக்காதவர்களுக்காகவும்) என்று கூறியுள்ளார்கள்.

தக்பீர் கூறுதல்

ஷாபீஈ மத்ஹபின்படி அரபா (பிறை -9) தினத்தின் காலை பஜ்ர் தொழுகையிலிருந்து அய்யாமு தஷ்ரீக் (பிறை .13) பதிமூன்றாவது நாளின் அஸ்ர் தொழுகை வரை எல்லாத் தொழுகைகளுக்கு பின்பும் தக்பீர் சொல்வது சுன்னத்தாகும். களா மற்றும் ஜனாஸா ஆகிய தொழுகைகளுக்குப்பின்பும் தக்பீர் சொல்வது சுன்னத் ஆகும். இதே போன்று துல்ஹஜ் மாதத்தின் துவக்கம் பிறை ஒன்று முதல் பத்துவரை குர்பானி பிராணியை பார்க்கும் போதும்

அவைகளின் சப்தங்களை காதால் கேட்கும் போதும் தக்பீர் கூறுவது சுன்னத் ஆகும்.

ஹனபி மத்ஹபின் படி : பிறை ஒன்பது அரபா நாளின் பஜ்ர் தொழுகையிலிருந்து பதிமூன்றாம் நாள் அஸர் தொழுகைவரை தக்பீர் கூறுவது வாஜிப் ஆகும். தனித்தோ அல்லது ஜாஅத்துடனோ தொழுபவராக இருந்தாலும் சரி, பயணத்தில் இருப்பவரானாலும், உள்ளூரில் தங்கியிருப்பவராக (முகீமாக) இருந்தாலும், ஆணாக அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி, கிராமவாசியாக, நகரவாசியாக இருந்தாலும் சரி தக்பீர் கூறுவது வாஜிப்ஆகும்.

اَللهُ اَكْبَــرُ اَللهُ اَكْبَــرُ اَللهُ اَكْبَــرُ لاَ اِلهَ اِلاَّ اللهُ وَ اللهُ اَكْبَــرُ
اَللهُ اَكْبَــرُ وَلِلّٰهِ الْحَمْدُ ....

மற்றொரு தக்பீர்

اَللهُ اَكْبَــرُ اَللهُ اَكْبَــرُ اَللهُ اَكْبَــرُ كَبِيْرًا وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيْرًا وَسُبْحَانَ اللهِ بُكْرَةً وَاَصِيْلًا لاَ اِلهَ اِلاَّاللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ وَهُوَ عَلَى كُلِّ شَيْئٍ قَدِيْر لاَ اِلهَ اِلاَّاللهُ وَلاَ نَعْبُدُ اِلاَّ اِيَّاهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ .
لاَاِلهَ اِلاَّاللهُ وَحْدَهُ وَصَدَقَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَعَزَّ جُنْدَهُ هَزَمَ الاَحْزَابَ وَحَدَهُ لاَ اِلهَ اِلاَّاللهُ وَاللهُ اَكْبَرْ

குர்பானி இறைச்சி மற்றும் தோல்

عَنْ عَلِيّ رَضِىَ اللهُ عنه قَالَ :أَمَرَنِى رَسُوْلُ اللهِ صلى الله عليه وسلم اَنْ اَقُوْمَ عَلَىَ بُدْنِهِ وَاَنْ اَتَصَدَّقَ بِلَحْمِهَا وَجُلُوْدِهَا وَاَجِلَّتِهَا وَاَنْ لاَ اُعْطِيَ الْجَزَّارَ مِنْهَا . قَالَ : نَحْنُ نُعْطِيْهِ مِنْ عِنْدِنَا

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவர்களின் ஒட்டகத்தை அறுத்து குர்பானி கொடுக்கும் பொறுப்பை கவனிக்கும் மாறும் அவற்றின் இறைச்சி, தோல் மற்றும் சேணம் ஆகியவைகளை தர்மம் செய்யுமாறும் அவற்றில் எந்த உறுப்பையும் அறுப்பவருக்கு கூலியாகத் தரக்கூடாது என்றும் எனக்குக்குக் கட்டளையிட்டார்கள். அறுப்பவருக்கான கூலியை (நம்மிட மிருந்து) தனியாக கொடுக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டார்கள்.

-அறிவிப்பாளர்:அலி (ரலியல்லாஹு அன்ஹு) நூல்: முஸ்லிம்

سَمِّنُوْا ضَحَايَاكُمْ فَاِنَّهَا عَلَى الصِّرَاطِ مَطَايَاكُمْ

கொழுத்த பிராணியாக பார்த்து குர்பானி கொடுங்கள். ஏனெனில் அது ஸிராதுல் முஸ்தகீம் பாலத்தில் உங்களை சுமந்து செல்லும் வாகனமாக வந்து நிற்கும். -நபிமொழி

قَالُوْا :يَا رَسُوْلَ اللهِ نَهَيْتَ عَنْ اِمْسَاكِ لُحُوْمِ الاَضَاحِى بَعْدَ ثَلاَثٍ فَقَالَ رسول الله اِنَّمَا نَهَيْتُكُمْ مِنْ اَجْلِ الدَّافَّةِ الَّتِى كَانَتْ دَفَّتْ حَضْرَةَ الاَضْحى فَكُلُوْا وَتَصَدَّقُوْا وَادَّخِرُوا

-நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதர்அவர்களே! மூன்று நாட்களுக்கு மேல் குர்பானி இறைச்சியை சேமித்து வைத்திருக்க தடை விதித்து விட்டீர்களே! என்று கேட்டனர். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று (வெளியூர் மற்றும் பக்கத்து கிராமங்களிலிருந்து வந்து) உங்களுடன் சேர்ந்துகொள்ளும் ஏழைகளுக்காக தர்மம் செய்யவே அவ்வாறு தடைவிதித்திருந்தேன். (இனி) நீங்கள் அதை சாப்பிடுங்கள், தர்மம் செய்யுங்கள், சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

நூல்: முஅத்தா. பக்கம் :188

أُخْبِرَ أَبُوْ سَعِيْدٍأَنَّ رَسُوْلَ اللهِ قَالَ: نَهَيْتُكُمْ عَنْ لُحُوْمِ الأَضَاحِيْ بَعْدَ ثَلاَثٍ فَكُلُوْا وَتَصَدَّقُوْا وَادَّخِرُوْا نَهَيْتُكُمْ عَنِ الاِنْتِبَاذِ فَانْتَبِذُوْا وَكُلُّ مُسْكِرٍ حَرَامٌ نَهَيْتُكُمْ عَنْ زِيَارَةِ الْقُبُوْرِ فَزُوْرُوْهَا وَلاَ تَقُوْلُوْا هُجْراً

ஹழ்ரத் அபு ஸயீது அல்குத்ரீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் மற்றவர்களிடம் குர்பானி இறைச்சியை மூன்று நாட்களுக்கு மேல் சேர்த்து வைக்ககூடாது என்ற நபியின் தடை உத்தரவு குறித்து கேட்டபோது அவர்களுக்கு " நான் மூன்று நாட்களுக்கு மேல் குர்பானி இறைச்சியை சாப்பிட உங்களை தடுத்திருந்தேன். இனிமேல் நீங்கள் சாப்பிடுங்கள்; அதை தர்மம் செய்யுங்கள். சேகரித்தும் வைத்துக்கொள்ளுங்கள். திராட்சை பழத்தை நீரில்

மதுவைத்து அருந்துவதைவிட்டும் உங்களை தடுத்திருந்தேன் இனிமேல் அருந்திக்கொள்ளுங்கள். ஆனாலும் போதையை ஏற்படுத்தும் அனைத்தும் தடைசெய்யப்பட்டதாகும். மண்ணறைகளை ஜியாரத் செய்ய தடுத்திருந்தேன். இனிமேல் அவைகளை ஜியாரத் செய்யுங்கள். அங்கு தீய (கெட்ட) வார்த்தைகளை சொல்லாதீர்கள்.

நூல்: முஅத்தா பக்கம் -188

ஷாபிஈ மத்ஹபின் கூற்று பின்வருமாறு:

குர்பானி (உல்ஹிய்யா) யில் இரண்டு வகை உண்டு 1) கடமையான குர்பானி 2) சுன்னத்தான குர்பானி-
ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் இந்த வருடம் குர்பானி கொடுக்கப்போகிறீர்களா? என்று கேட்டு, அதற்கு பதிலாக வெறுமென "ஆம்" என்று பதில் கூறினால் இது கடமையான குர்பானியாக ஆகிவிடும். இந்த குர்பானி இறைச்சியில் கொஞ்சம் கூட சாப்பிடக்கூடாது . சாப்பிடுவது ஹராம் ஆகும். முழு இறைச்சியையும் தர்மம் செய்து விடுவது அவசியமாகும். யார்கேட்டாலும். யாரிடம் பேசினாலும் சொல்லும் போதே "சுன்னத்தான குர்பானி" என்று சொல்ல வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டு சொல்லிவிட்டால் "சுன்னத்தான குர்பானி" யாக ஆகிவிடும். [illegible] நாம் மூன்றில் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளலாம். [illegible]பிடலாம். தவறில்லை. பொதுவாகவே சுன்னத்தான குர்பானி கொடுக்கும்போது மொத்த இறைச்சியை மூன்று பங்காகப்பிரித்து ஒரு பங்கு தனக்கும், தன் குடும்பத்தினருக்காகவும் எடுத்துக் கொள்ளவேண்டும். இன்னொரு பங்கை உற்றார் உறவினர்களுக்கு கொடுத்துவிட

பொருளடக்கம்

வேண்டும். மீதமுள்ள மற்றொரு பங்கை ஏழைகளுக்கு தர்மம் செய்து விட வேண்டும். இவ்வாறு செய்வது சுன்னத்ஆகும். தேவைக்காக கொஞ்சம் (ஈரல் போன்ற ஏதாவது ஒன்றை) எடுத்துக்கொண்டு மற்ற எல்லா இறைச்சியையும் முழுமையாக தர்மம் செய்து விடுவதே மிகச்சிறந்ததாகும். மேலும் அறுத்து உரித்து தந்தவருக்கு கூலி தான் கொடுக்க வேண்டும். தோலையோ, இறைச்சியையோ கூலியாக கொடுக்கக் கூடாது. ஒரு முஸ்லிம் மிகவும் ஏழையாக இருப்பின், அதிக குடும்ப உறுப்பினர்கள் இருந்தால் அனைத்து இறைச்சியையும் ஒருவருக்கே கொடுக்கலாம்.

ஏழை குர்பானி இறைச்சியை பெற்றுக்கொண்டு பிறகு விற்றாலும் கூட கூடும். செல்வந்தர்களுக்கும் அன்பளிப்பாக குர்பானி கறியை வழங்கலாம். ஆனால் செல்வந்தர்கள் விற்பது கூடாது. குர்பானி தோலை ஏழைகளுக்கு தர்மம் செய்திட வேண்டும். தனக்காக பயன் படுத்திக் கொள்ளலாம். தனது சொந்த செலவுக்காக விற்கக்கூடாது

குர்பானி இறைச்சியை முஸ்லிம் அல்லாத காபிர்களுக்கு கொடுக்கக்கூடாது. நிர்பந்தம் ஏற்பட்டால் கறிக்கடைக்கு சென்று காசு கொடுத்து இறைச்சியை விலைக்கு வாங்கி கொடுக்கவும்.

ஹனபி மத்ஹபின் கூற்று பின்வருமாறு :

குர்பானி கறியை தனக்கும், உற்றார் உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும் ஆக மொத்தம் மூன்று பங்காக பிரித்துக்கொள்ள வேண்டும். ஒருவன் தனக்காக குர்பானி கொடுக்கும்படி ஏவி விட்டு இறந்து விடுவாராயின் அந்த குர்பானியில் கொஞ்சம் கூட எடுக்கக்கூடாது. மொத்தக்கறியையும் ஏழைகளுக்கு தர்மம் செய்திட

பொருளடக்கம்

வேண்டும். கூட்டுக்குர்பானி கறியாக இருந்தால் எடைபோட்டு ஏழு பங்கும் சரிசமமாக பங்கிடப்பட வேண்டும். ஏழுபேரில் யாருக்காவது கறி அளவில் குறைவு ஏற்பட்டால் குறைவுபட்டவர் அதை மன்னித்தாலும் சரியாகாது. அரபி மதரஸாக்களில் ஏழை மாணவர்கள் படித்து வருவதால் தோலை மதரஸாவுக்கு கொடுக்கலாம். ஆனால் மத்ரஸாவின் கட்டிட நிதிக்காக கொடுக்கக்கூடாது. தொழுகை முஸல்லா போன்று ஏதேனும் செய்வதற்காக தனக்காகவும் வைத்துக்கொள்ளலாம். குர்பானி தோலை விற்றால் அத்தொகையை தர்மம் செய்வது வாஜிப் (கடமை) ஆகும். பள்ளிகளில் பணியாற்றிவரும் இமாமுக்கோ, மோதினாருக்கோ குர்பானியை அறுத்ததற்ககாக கூலியாக கொடுக்ககூடாது.

சில முக்கிய சட்டங்கள்

عَنْ اُمِّ سَلَمَةَ رَضِى الله عنها قَالَتْ : قَالَ رَسولُ الله صلى الله عليه وسلم اِذَا دَخَلَ الْعَشْرُ وَاَرَادَ بَعْضُكُمْ اَنْ يُضَحِّيَ فَلاَ يَمَسَّ مِنْ شَعْرِهِ وبَشَرِهِ شَيْئًا وَفِيْ رِوَايَةِ فَلاَ يَأْخُذَنَّ شَعْرًا وَلاَ يُقْلِمَنَّ ظُفْرًا

நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்:-

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் வந்து உங்களில் யார் அதில் குர்பானி கொடுக்க நாடுகிறாரோ அவர் தன் உடலில் எந்த பகுதியிலும் முடிகளை களைய வேண்டாம்.

மற்றொரு அறிவிப்பில் முடிகளை களைய வேண்டாம் அத்தோடு நகங்களையும் கத்திரிக்க வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிவிப்பாளர்: உம்மு ஸல்மா (ரலி)

நூல் :மிஷ்காத் , பக்கம் :127

பொருளடக்கம்

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கூற்றுக்கிணங்க எந்த ஆடு, மாடு, ஓட்டகம் இவற்றில் எதுவானாலும் அதை பருமனுள்ளதாக, தடித்ததாக பார்த்து குர்பானி கொடுக்கவும், காரணம் இந்த குர்பானி பிராணி நாளை சிராதுல் முஸ்தகீம் பாலத்தில் நம்மை சுமந்து செல்லும் வாகனமாக வந்து நிற்கும். மேலும் குர்பானி கொடுப்பவர் துல்ஹஜ் பிறை ஒன்று முதல் குர்பானி கொடுத்து முடிக்கும்வரை உடலின் எந்த பாகத்திலிருந்தும் முடியையும், கை, கால் விரல்களில் நகத்தையும் அகற்றக்கூடாது (வெட்டி எடுக்கக்கூடாது.) இவ்வாறு நடந்துக் கொள்வது சுன்னத்தாகும்.

1.வயிற்றில் குட்டி உள்ள பிராணியை குர்பானி கொடுத்தால் குட்டி உயிருடன் இருந்தால் அதையும் பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் சொல்லி அறுத்து சாப்பிட வேண்டும். நிறை மாத கர்ப்பமாக இருக்கும் பிராணியை குர்பானி கொடுப்பது மக்ருஹ் ஆகும். குர்பானிக்காக பிராணியை வாங்கிய பின் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால் வசதி உள்ளவர்கள் வேறு பிராணி வாங்கி கொடுக்கனும். ஏழை அதையே கொடுக்கலாம்.

عَنْ شَدَّاد بن اوس عَنْ رَسُوْلُ اللّٰه صلى الله عليه وسلم قَالَ: انّ اللّٰه تَبَارَك وَتَعَالى كَتَبَ الاحْسَانَ عَلى كُلِّ شَيْئٍ فَاذَا قَتَلْتُمْ فَاَحْسِنُوْا الْقِتْلَةَ فَاذَا ذَبَحْتُمْ فَاحْسِنُوا الذَّبحَ وَلْيُحِدَّ اَحَدُكُمْ شُفْرَتَهُ وَلْـيُرِحْ ذَبِيْحَتَهُ — رواه مسلم — مشكوة

பொருளடக்கம்

நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள் : அல்லாஹ் ஒவ்வொன்றுக்கும் ஓர் அழகிய வழி முறையை வகுத்து தந்து அதனடிப்படையில் செயல்படுவதை கடமையாக்கியுள்ளான். எனவே உங்களில் பிராணியை அறுப்பவர் கத்தியை நன்கு கூர்மையாக ஆக்கிக் கொண்டு அப்பிராணியை வேதனையின்றி மென்மையாக அறுக்கட்டும்.

மேற்கண்ட நபி மொழியை கருத்தில் கொண்டு குர்பானி பிராணியை அறுப்பதற்கு முன் கத்தியை நன்கு தீட்டிக்கொள்ள வேண்டும் மேலும் அறுப்பவர் பெண்ணாகவோ அல்லது சிறுவராகவோ இருந்தால் அடுத்தவரின் உதவியை நாடலாம் ஆயினும் அருகில் இருந்து தக்பீர் கூறுவது சிறந்ததாகும்.

துல்ஹஜ் மாதத்தின் பிறை ஒன்பதாவது நாளான அரபாத்னத்தன்று நோன்பு நோற்பது ஹாஜியல்லாதவர்களுக்கு சுன்னத்தாகும். எனவே குர்பானி கொடுப்பவர்கள் இதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

அகீகா العقيقة

اَلْعَقِيْقَةُ : اَلشَّاةُ الَّتِيْ تُذْبَحُ عَنِ الْمَوْلُوْدِ فِى الْيَوْمِ السَّابِعِ مِنْ وِلاَدَتِهِ

அகீகாக என்பது குழந்தை பிறந்த ஏழாம் நாள் குழந்தைக்காக ஆடு அறுத்து அதன் இறைச்சியை பங்கீடு செய்யும் செயலைக்குறிக்கும் பெயர்ச் சொல்லாகும். -மு.ஜமு லுகத்தில் புகஹா பக்கம் 318

பொருளடக்கம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது மகனார் இப்றாஹீம் (ரலி) பிறந்த தினத்தில் அவருக்காக இரண்டு ஆடுகளை ஆறுத்து அதன் இறைச்சிகளை ஏழைகளுக்கு பங்கிட்டுள்ளார்கள். மேலும் தலைமுடியை களைந்து எடைபோட்டு அதன் அளவுக்கு வெள்ளியை தர்மம் செய்துள்ளார்கள்.

அகீகா பற்றிய நபிமொழிகள்

عَنْ سَمُرَةَ : اَنَّ النَّبِي صَلَّى الله عليه وسلم قَالَ فِى الْعَقِيْقَة كُلُّ غُلاَمٍ مُرْتَهَنٌ بِعَقِيْقَتِهِ تُذْبَحُ عَنْهُ يَوْمَ سَابِعِهِ وَيُحْلَقُ رَأْسُهُ وَ يُسَمّى

– اِبْنُ مَاجَةَ , تِرْمِذِي

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் பின்வரும் மூன்று காரியங்களை உள்ளடக்கிக்கொண்டு ஈடுவைக்கப் பட்டிருக்கிறது. அதாவது ஈடு (அடமானம்) நிறைவேற்றப்படுவது போன்று அகீகாவும் நிறைவேற்றப்படவேண்டியதாகும். அவை 1) குழந்தை பிறந்த ஏழாம் நாள் ஆடு அறுப்பது 2) அதே நாளில் தலைமுடியை கலைவது 3) அதே நாளில் பெயர் சூட்டுவது ஆகிய காரியங்களாகும்.

விளக்கம் : "ஈடுவைக்கப்பட்டிருக்கிறது" என்பதற்கு இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்கள் பின்வருமாறு விளக்கம் தருகிறார்கள். அதாவது (அகீகா கொடுக்கும் வரை) அகீகா கொடுக்காத பெற்றோர்களுக்காக பிள்ளைகள் அல்லாஹ்விடம் மறுமையில் மன்றாட மாட்டார்கள். (ஷபாஅத் செய்ய மாட்டார்கள்.)

பொருளடக்கம்

وعن عائشة رضى الله عنها قَالَتْ : قَالَ رَسُوْلُ اللهِ صلى الله عليه وسلم عَنِ الْغُلَامِ شَاتَانِ مُكَافِئَتَانِ وَعَنِ الْجَارِيَةِ شَاةٌ

رواه الترمذي

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ஆண் குழந்தைக்கு சரிநிகரான இரு ஆடுகளும் பெண் குழந்தைக்கு ஒரு ஆடும் அறுத்து அகீகா கொடுக்க வேண்டும்.

-அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) நூல்: திர்மிதி

عن عائشةَ رضىالله عنها قَالَتْ: عَقَّ رَسولُ الله صلىالله عليه وسلم عَنِ الْحَسَنِ وَالْحُسَيْنِ يَوْمَ السَّابِعِ وَسَمَّاهُمَا وَاَمَرَ اَنْ يُمَاطَ عَنْ رُؤُوْسِهِمَا الاَذى

நபிகள் (ஸல்) அவர்கள் தங்களது பேரப்பிள்ளைகளான ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) ஆகிய இருவருக்கும் அவர்கள் பிறந்த ஏழாம் நாளன்றே அகீகா கொடுத்து, பெயர் வைத்து, தலைமுடியும் எடுக்கப்படுவதற்கு ஆணையிட்டார்கள்.

-அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி)

பொருளடக்கம்

அகீகா கொடுக்கும் முறை

وعن عائشة رضى الله عنها قَالَتْ : قَالَ النبي صلى الله عليه وسلم اِذْبَحَوْا عَلى اِسْمِهِ فَقُوْلُوْا بِسْمِ اللهِ اَللّٰهُمَّ لَكَ وَاِلَيْكَ هذهِ عَقِيْقَةُ فُلاَنٍ

நபிக்ள் (ஸல்) கூறினார்கள்:-

அகீகா பிராணியை குழந்தையின் பெயர் சொல்லி அறுங்கள் ஆகையால் பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம லக வஇலைக ஹாதிஹி அகீகது ஃபுலானின்

குறிப்பு : அகீகா கொடுப்பவர் மேற்கண்ட துஆவை ஓதுவதுடன் அதன் முடிவில் உள்ள "ஃபுலான்" என்ற வார்த்தையை எடுத்துவிட்டு அவ்விடத்தில் குழந்தையின் பெயரைச் சொல்லிக் கொள்ளவும்.

அகீகா இறைச்சி

عَنْ جَعْفَرِ بْنِ مُحَمَّدٍ عَنْ اَبِيْهِ اَنَّ النَّبِيَّ صَلَّى الله عليه وسلم قَالَ: فِى الْعَقِيْقَةِ الَّتِيْ عَقَّتْهَا فَاطِمَةُ عَنِ الْحَسَنِ وَالْحُسَيْنِ رَضِيَ اللهُ عَنْهُمَا اَنْ يَبْعَثُوْا اِلَى الْقَابِلَةِ مِنْهَا بِرَجُلٍ وَكُلُوْا وَاَطْعِمُوْا وَلاَ تُكَسِّرُوا مِنْهَا عَظْمًا – رواه ابو داؤد

பொருளடக்கம்

ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) ஆகியோருக்காக குர்பானி கொடுக்கப்பட்டபோது பாத்திமா (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் அகீகா இறைச்சியில் (சதைப்பிடிப்பான) கால்பகுதியை குழந்தைக்கு பேருகாலம் பார்த்த பனிப்பெண்ணுக்கு (ஆயாவுக்கு) அனுப்பி வைக்கச்சொன்னார்கள். மேலும் நீங்களும் சாப்பிடுங்கள் மற்றவர்களுக்கும் சாப்பிடக்கொடுங்கள் அதிலுள்ள எலும்புகளை முறிக்கா தீர்கள் என்றும் கூறினார்கள்.

-அறிவிப்பாளர்: ஜ.:.பர் இப்னு முஹம்மத். நூல்: அபூதாவூத்

ஷா.:.பி மத்ஹபின் படி அகீகா இறைச்சியை மூன்று சமபங்குகளாக பிரித்து ஒன்று தமக்காகவும் மற்றொன்று ஏழைகளுக்காகவும் பிரிதொன்று சுற்றத்தார்களுக்காகவும் வழங்க வேண்டும். அகீகாவை நேர்ச்சை செய்தாலோ அல்லது சுன்னத்தான அகீகா என்று கூறாமல் 'அகீகா கொடுப்பேன்' என்று கூறினாலோ, இந்த ஆட்டை அகீகாவாக ஆக்கினேன் என்று கூறினாலோ அல்லது கேட்பவருக்கு பதில் கூறும்போது அகீகா கொடுக்கப்போகிறேன் என்று கூறினாலோ ஆக இந்த

நான்கு அமைப்புகளிலும் அகீகா கொடுப்பது பர்ளாகும். அப்போது அதன் இறைச்சி முழுவதையும் தர்மம் செய்திட வேண் அதன் சிறு துண்டைக்கூட உண்பது கூடாது. அகீகாவின் பெரும்பாலான சட்டவிதிகள் குர்பானி பிராணியின் சட்டவிதிகளைப்போன்றவையே ஆகும் எனினும் அகீகா பிராணியை அறுத்த பின்பு அதன் எலும்புகளை முறிக்காமல் முழுமையாகவும் அதன் இறைச்சியை சமைக்காமல் கொடுப்பதைவிட சமைத்து அனுப்புவதே சிறப்பான தாகும். குர்பானி கொடுப்பதற்கு காலவர்ரையறை உள்ளது போன்று அகீகாவிற்கு காலவரையறை எதுவுமில்லை. குர்பானியின் சிறுபகுதியையாவது ஏழைகளுக்கு தர்மம் கொடுக்க வேண்டும். ஆனால் அகீகாவினை ஏழைகளுக்கு தர்மமாக கொடுத்துதான் ஆக வேண்டும் என்பதில்லை. சுற்றத்தார்களுக்கு அன்பளிப்பாக கொடுத்தாலும் கூடும்.

-ஷா.ஃ.பி பிக்ஹின் சட்டக்களஞ்சியம் பக்கம் :396

ஹனபி மத்ஹபின்படி மாடு, ஒட்டகம் ஆகியவற்றில் கூட்டாக சேர்ந்து அகீகா கொடுக்கலாம், ஆனால் ஆண்பிள்ளைக்கு இருபங்கும் பெண்பிள்ளைக்கு ஒரு

பங்கும் கொடுக்க வேண்டும். எலும்புகளை முறிக்காமல் கறியை பிரித்து எடுக்கவேண்டும். இவ்வாறுசெய்வதே சிறந்ததாகும். கறியை சமைத்தோ அல்லது சமைக்காமல் பச்சையாகவோ கொடுக்கலாம். பெற்றோர்களும் சாப்பிடலாம் மற்றவர்களுக்கும் கொடுக்கலாம்.

குறிப்பு: சிறுவயதில் குறிப்பிட்ட காலத்தில் குர்பானி கொடுக்க தவறினால் ஆயுள் முழுக்க இக்கடமை அவரின் மீது நீங்காமல் இருக்கும் எனவே வசதி வாய்ப்பு வரும்பொழுது இதனை தவறாமல் நிறைவேற்றி விடவேண்டும்.